**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 927 , நாள் : 11.12.2018**
**———————**

1 சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் உள் வட்டம், ரங்கசமுத்திதரம் கிராமம், ரீ. சர்வே எண். 86/2, வார்டு–E, பிளாக்–20, நகரளவு எண். – 59, பு. ஹெ.1.35.50–ல் 0.61.48 ஹெக்டேர் விஸ்தீரமுள்ள பூமியை சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றம் அமைக்க நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் சத்தியமங்கலம் நகராட்சிக்கு ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதனை வருவாய் வட்டாட்சியருக்கோ, கோபி செட்டிபாளையம், சத்தியமங்கலம் உள்வட்ட நில வருவாய் ஆய்வாளருக்கோ தெரிவிக்கக்கோரி நில வருவாய் ஆய்வாளர் (பொ), சத்தியமங்கலம் உள் வட்டம், சத்தியமங்கலம் வட்டம் அவர்களால் நாள். 10.12.2018 ம் தேதி கடிதம் வரப்பெற்றது. இதன் மீது சத்தியமங்கலம் நகராட்சி சார்பாக ஆட்சேபணை ஏதும் இல்லை என சத்தியமங்கலம் நகராட்சி நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் அவர்களது 10.12.2018–ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சி சார்பாக மேற்கண்ட விஸ்தீரணமுள்ள பூமியில் சத்தியமங்கலம் சார்பு நீதிமன்றம் அமைக்க ஆட்சேபணையின்மை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : - நில மாற்றம் செய்வதற்கான ஆட்சேபணையின்மை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். (ந. க. எண். 1640/2018/எப். 1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 928 , நாள் : 11.12.2018**
**––––––––**

2 நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.28369/2018/எஸ்-3 நாள். 4.12.2018 உத்திரவின்படி சத்தியமங்கலம் நகராட்சியில் 105 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர் பணியிடங்களை வெளிக்கொணர்வு முறையில் தனியார் மூலம் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

துப்புரவு அலுவலர் குறிப்பின்படி தற்பொழுது பொது சுகாதாரப்பணிகள் பாதிப்படையாமல் நடைபெற 55 பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் எனவும், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளைப் பொறுத்து பின்னர் பணியாளர் எண்ணிக்கையினை உயர்வு செய்து கொள்ளலாம் எனவும் குறிப்பு தந்துள்ளார். அதன்படி 55 எண்ணிக்கை பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,05,00,000/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1) நகராட்சியின் நிதி நிலையைக்கருத்தில் கொண்டு பொது சுகாதாரப்பணிகள் பாதிக்கப்படாமல் நடைபெற தற்போது 55 எண்ணிக்கை பணியாளர்களை மட்டும் வெளிக்கொணர்வு முறையில் பயன்படுத்திக்கொள்ள நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந. க. எண். 973/2018/எச். 1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 929 , நாள் : 11.12.2018**

---

3 சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையக்கடைகள், கச்சேரி வீதி, சத்திரக் கடைகள் மற்றும் புதிய பேருந்து நிலைய கடைகளுக்கான மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 04.12.2018 அன்று 46 வது முறையாக கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்ட உயர்ந்த பட்ச மாத வாடகையினை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | ஏல உரிமதாரர் பெயர் | மறுமதிப்பீட்டு குழு அறிக்கையின் படி மாத வாடகைரூ. | 1 ச. அடி மார்க்கெட் மதிப்பின் படி மாத வாடகை ரூ. | சார் பதிவாளர் மதிப்பின்படி மாத வாடகை 1 ச.அடி ரூ. | ஒப்பந்தப் புள்ளி மூலம் கோரப்பட்ட உயர்ந்த பட்ச மாத வாடகை ரூ. | விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலை கடை | 26 | எம். பழனிசாமி | 3500/– | 5565/– | 7050/– | 4500/– | ஒப்பந்தப் புள்ளி |

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்கண்ட பழைய பேருந்து நிலைய கடை எண். 26 க்கு 04.12.2018 ஆம் தேதிய மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட உயர்ந்த பட்ச மாத வாடகையாகக் கோரியுள்ளார். இது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் மறு மதிப்பீட்டு குழுவின் அறிக்கை நாள்.10.03.2017 இன்படி மேல்தள கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.3500/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது சார்பதிவாளர் ( ம) சந்தை மதிப்பு காட்டிலும் குறைவாகவும் மறு மதிப்பீட்டு குழு அறிக்கையின்படி கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. இது மேல் தளக்கடை என்பதால் மேற்கண்ட உயர்ந்தபட்ச மாத வாடகையை உறுதி செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். (ந. க. எண்.3800/2016/அ2)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 930 , நாள் : 11.12.2018**

**-------**

4 சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடைகள், கச்சேரி வீதி, சத்திரக் கடைகள் மற்றும் புதிய பேருந்து நிலைய கடைகளுக்கான மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 04.12.2018 அன்று 46 வது முறையாக கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்ட உயர்ந்த பட்ச மாத வாடகையினை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | ஏல உரிமதாரர் பெயர் | 1 ச. அடி மார்க்கெட் மதிப்பின்படி மாத வாடகை ரூ. | சார் பதிவாளர் PWD மதிப்பின்படி மாத வாடகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்ட உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ. | விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கச்சேரி வீதி, சத்திரக் கடை | 12 | எ. சுபைதா | 2360/– | 4620/– | 6000/– | ஒப்பந்தப் புள்ளி |

**அலுவலகக்குறிப்பு : -**

மேற்கண்ட கச்சேரி வீதி சத்திரக்கடை எண். 12 க்கு ஏலதாரர் 04.12.2018– ஆம் தேதி மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட உயர்ந்த பட்ச மாத வாடகை கோரியுள்ளார். இது PWD சார்பதிவாளர் மற்றும் சந்தை மதிப்பை காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால், உயர்ந்த பட்ச மாத வாடகையினை உறுதி செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ2)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 931 , நாள் : 11.12.2018**

---

5 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகை மருந்து மிஷின்கள் பழுது பார்த்தல் பணிக்கு 26.11.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் விலைப்புள்ளிஅளித்துள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சிஸ்டம்ஸ் என்ஜினியரிங் – சென்னை | 24270.00 |
| 2 | விக்கேனஸ்வரி இண்டஸ்ட்ரியல் புராடக்ட்ஸ், சென்னை | 26250.00 |
| 3 | எஸ். என். எண்டர்விரைசஸ், சென்னை | 25560.00 |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளி நகர்மன்றம் அங்கீகரித்தல்.

**அலுவலகக்குறிப்பு :–**

டெங்கு தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட புகை மருந்து இயந்திரத்தின் தயாரிப்பு நிறுவனமான குறைவான சிஸ்டம்ஸ் என்ஜினியரிங், சென்னை என்னும் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 1210/2018/எச்.1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 932, நாள் : 11.12.2018**

———————

6 சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 4 முதல் 11 வரை உள்ள குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் திப்புசுல்தான் சாலையின் ஓரத்தில் செல்கிறது. இதனால், சாலை அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. மேலும், இக்கழிவு நீரால் அடிக்கடி பொதுமக்களுக்கு காயச்சல் மற்றும் இதர நோய்கள் பரவி வருகிறது. இதனை தடுக்கும் பொருட்டு புதியதாக அத்தாணி சாலை சந்திப்பு முதல் சத்தியா தியேட்டர் வரை மழை நீர் வடிகால் அமைக்கப்பட வேண்டிய அவசியம் ஆகும்.எனவே,மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினமாக ரூ.9.70 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2018-2019 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 100/2016/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 933, நாள் : 11.12.2018**

--------

7 சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் தினசரி 1000 முதல் 2000 வரை பொதுமக்கள் மற்றும் ஒட்டுநர்கள்,நடத்துனர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.இவர்களுக்கு போதுமான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று சமுதாய அமைப்புகள் மற்றும் பொது மக்கள் அடிக்கடி புகார் தெரிவித்து வருகிறார்கள். மேலும், பொதுமக்கள் மற்றும் வாகன ஒட்டுநர்கள், நடத்துனர்கள், கடை வியாபாரிகள் பயன்பெரும் வகையில் புதியதாக ஆழ்குழாய் கிணறு, சுற்று சுவர், கழிப்பிட வசதிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: -**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2018-2019 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 100/2016/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 934 , நாள் : 11.12.2018**

**-------**

8 சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் 2018-2019 ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மானிய கோரிக்கை மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 16 நகராட்சி பகுதியில் உள்ள பூங்காக்கள் அனைத்து வசதிகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. இந்நகராட்சியில் கீழ்கண்ட பூங்காக்கள் கம்பி வேலிகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.9.75 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | தென்றால் நகர் |
| 2 | கொங்கு நகர் |
| 3 | சௌடேஸ்வரி நகர் |
| 4 | திரு நகர் காலனி (LIC மணிகண்டன் பின்புறம்) |
| 5 | கண்ணப்பன் லே-அவுட் |
| 6 | திரு.வி.க.நகர். (கூட்டுறவு பின்புறம்) |
| 7 | ஒட்டகுட்டை ரோடு (முனியப்பன் கோவில் எதிரில்) |
| 8 | பரிசல் துறை வீதி ரங்கசமுத்திரம் |
| 9 | ஹசீப்கான் லே-அவுட் (ஆணையாளர் குடியிருப்பு பின்புறம்) |
| 10 | மாதேஸ்வரன் நகர் (பெரியகுளம்) |
| 11 | மாருதி (இந்திரா நகர்) |
| 12 | ஜெ.ஜெ.நகர் (குள்ளங்கரடு) |
| 13 | ஆண்டவர் நகர் |
| 14 | ஜெயகேந்திர சிட்டி |
| 15 | ஜெயகேந்திர சிட்டி-2 |

அலுவலக குறிப்பு: -
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2018-2019 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந. க. எண். 100/2016/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 935 , நாள் : 11.12.2018**

-------

9 சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கடை எண். 30 மற்றும் 31 ஏலதாரருக்கு கடை ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏலதாரரின் கோரிக்கை மனுவில் புதிய பேருந்து நிலையம் கடை எண். 30 மற்றும் 31 ஆகிய இரண்டு கடைகள் உரிமம் பெற்று பேக்கரி கடை நடத்தி வருவதாகவும், ஒரு கடையின் அளவு குறைவாக உள்ளதால் நுகர்வோர்களுக்கு சரிவர பேக்கரி பொருட்கள் வழங்க இயலாததால், இரண்டு கடைகளின் இடைப்பட்ட சுவர் தனது சொந்த செலவில் இடிக்க அனுமதி கோரியுள்ளார்கள், வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், சுவற்றினை இடிக்க உரிய கட்டணங்கள் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலக குறிப்பு: -**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட சுவற்றினை இடிக்க ரூ.50,000.00 மட்டும் காப்பு தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும், ஏலதாரர் தனது சொந்த செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், குத்தகை காலம் முடிந்து செல்லும் போது தனது சொந்த செலவில் பழைய நிலையில் கடையை ஒப்படைக்க வேண்டும்.

3) மேற்கண்ட கடையின் முன்புறம் எவ்வித ஆக்கிரமிப்பு ஏற்படுத்தக்கூடாது,ஷட்டர் பொருத்த மட்டும் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 648/2018/இ1)

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 936 , நாள் : 11.12.2018**

**———————**

10 நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந. க. எண். 7366/2016/UPA2 நாள். 03.09.2018–ன்படி சாலையோர வியாபாரிகளின் துணை விதி உருவாக்கப்பட்டு, Protection of Livelihood & Regulation of Street Vending Act 2014, பிரிவு 7 ன்படி சாலையோர வியாபாரிகள் ( வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) துணை விதிகள் 2018 ஏற்படுத்தப்பட்டுள்ளதின் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட துணை விதிகள் மதுரை மாநகராட்சி சட்டம் 1971 அத்தியாயம் 15 பிரிவு 435/ கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 அத்தியாயாம் பிரிவு 15 பிரிவு 432 / தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும் அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும் மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், சத்தியமங்கலம் நகராட்சி சாலையோர வியாபாரிகள் ( வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018 ஏற்படுத்தப்பட்டு அதில் அத்தியாயாம் 1, 2, 3 மற்றும் விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள் ஆகியவற்றினை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந. க. எண். 2731/2014/எப் 1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 937 , நாள் : 31.12.2018**

---

1 இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2018-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 938, நாள் : 31.12.2018**

--------

2 இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2018-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் :939 , நாள் : 31.12.2018**

**--------**

3 சத்தியமங்கலம் நகராட்சி 2018-2019 ஆம் ஆண்டு கல்வி நிதிதிட்டத்தின் கீழ், இந்நகர் மன்றத்தில் தீர்மானத்தின்படி கல்விநிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 20.12.2018 ஆம் தேதி அன்று கோரியதில் வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுெ தாகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் கண்காணிப்பு நிழற்படக் கருவி (CCTV) பொருத்துதல் | ரூ.850000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.742440 |
| | | | M/s.Eye soft Contractor Coimbatore | ரூ.747700 |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்க சமுத்திரம் நகராட்சி உயர் நிலைப்பள்ளியில் கண்காணிப்பு நிழற்படக் கருவி (CCTV) பொருத்துதல். | ரூ.800000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.700740 |
| | | | M/s.Eye soft Contractor Coimbatore | ரூ.704800 |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்டசத்தி -1 நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கண்காணிப்பு நிழற்படக்கருவி (CCTV) பொருத்துதல் | ரூ.500000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.439490 |
| | | | M/s.Eye soft Contractor Coimbatore | ரூ.442350 |
| 4 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் நகராட்சி துவக்கப்பள்ளியில் கண்காணிப்பு நிழற்படக்கருவி (CCTV) பொருத்துதல். | ரூ.300000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.263785 |
| | | | M/s.Eye soft Contractor Coimbatore | ரூ.265175 |
| 5 | சத்தியமங்கலம் நகராட்சிபகுதிக்கு உட்பட்ட பழைய பேருந்து நிலைய வணிக வளாகம் மற்றும் அம்மாஉணவகம் ஆகிய இடங்களில் கண்காணிப்பு நிழற்படக்கருவி (CCTV) பொருத்துதல். | ரூ.160000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.137610 |
| | | | M/s.Eye soft Contractor Coimbatore | ரூ.138750 |

**அலுவலககுறிப்பு-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Future Era Contractor Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டுஎண். 100/2016/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 940 , நாள் : 31.12.2018**

------

4 அரசாணை எண். G.O. No. (Ms) No. 137 நாள். 26.12.2018 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M.A.2) – இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு 2018–2019 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ( IUDM) திட்டத்தின் கீழ் சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு செய்ய ரூ. 7.72 கோடி தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள ஆணை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்ட பணியில் பழுதடைந்த சாலைகள் சீரமைக்கும் பொருட்டு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனவே கீழ்க்கண்ட சாலை பணிகள் ஐந்து சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் ( கி. மீட்டர்) | சாலையின் அகலம் ( மீட்டர்) | மதிப்பீட தொகை ( இலட்சத்தில் ) | சிப்பம் எண். |
|---|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட ஓம் சக்தி நகர், லட்சுமி நகர், இந்திரா நகர் மற்றும் சாமி நகர் ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 2.23 | 4.10 | 161.60 | I |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட வரதம்பாளையம் ரூரல், அலீம் பீடி, மைதானம், வரதம்பாளையம் சுசீந்தரம் லே அவுட், கொங்கு நகர், கட்ட பொம்மன் நகர், அத்தாணி ரோடு லேன், 2 ராஜீவ் நகர் ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 2.05 | 4.10 | 162.00 | II |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட சத்தி ரூரால் ஐயப்பா நகர், கிட்டையா காலணி ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 2.20 | 4.10 | 170.00 | III |
| 4 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட கோட்டு வீராம்பாளையம் ரூரால், ஓம் சத்தி வீதி எண். 1 மற்றும் 2 மற்றும் பாக்கியலட்சுமி நகர் ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 1.52 | 4.10 | 104.00 | IV |
| 5 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட ஆசிரியர் காலனி, பாண்டியன் நகர், அண்ணா நகர் ஆகிய பகுதியில் தார் சாலை அமைத்தல். | 1.78 | 4.10 | 125.00 | V |
| | மொத்தம் | 9.765 | | 722.60 | |

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 941 , நாள் : 31.12.2018**

-------

5 சத்தியமங்கலம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு தொகையை விட ஒப்பந்த தொகை 18 % கூடுதல் என்பதால் கூடுதல் ஒப்பந்த தொகை ரூ. 8.33 கோடி அதற்கான 5 % சென்டேஜ் தொகை ரூபாய் 0.42 கோடி ஆக ரூ. 8.75 கோடிக்கு நிதி ஒதுக்கீடு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதை தொடர்ந்து, அராசணை எண். G.O. No. (Ms) No. 137 நாள். 26.12.2018 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA 2) இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு 2018–2019–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீடு ரூ. 54.26 கோடியில் மறுமதிப்பீடு (Tender Excess) செய்யப்பட்ட தொகை ரூ. 57.58 கோடி போக ரூ. 8.75 கோடி திட்ட நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. அரசாணை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 4444/2011/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 942 , நாள் : 31.12.2018**

--------

6 இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந. க. எண். 848/2018/அ2 நாள். 18.12.2018-ன்படி, மேற்படி பயிற்சி நிறுவனத்திற்கு 2018-2019 ம் ஆண்டிற்கான பங்களிப்பு தொகை ரூ. 50,000/- ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.1813/2017/சி1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் எண் : 943 , நாள் : 31.12.2018**

**-------**

7 சத்தியமங்கலம் நகராட்சி 2018-2019 ஆம் ஆண்டு கல்வி நிதி திட்டத்தின் கீழ், இந்நகர் மன்றத்தில் தீர்மானத்தின்படி கல்வி நிதி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையே ஒப்பந்தப்புள்ளி 21.12.2018 ஆம்தேதி அன்று கோரியதில் வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுதெ ாகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் நகராட்சி துவக்கப்பள்ளி, உயர்நிலைபள்ளி, ஆர்.பி.நகர். துவக்கப்பள்ளி, கொளத்தூர் துவக்கப்பள்ளி ஆகிய சத்தி-1 நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் மின்விசிறி அமைத்தல். | ரூ.700000 | M/s.Future Era Contractor Coimbatore | ரூ.614000 |
| | | | M/s.Eye soft Contractor Coimbatore | ரூ.620000 |

அலுவலககுறிப்பு-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவானஒப்பந்தப்புள்ளிவழங்கியM/s.Future Era Contractor Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினைமன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டுஎண். 100/2016/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 944, நாள் : 31.12.2018**
**——————**

8 சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண். 49 இன் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 65 வது முறையாக 20.12.2018 ஆம் தேதி கோரப்பட்டதில் ஏலம் கோர யாரும் முன் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி ஒன்று மட்டும் வரப்பெற்றது. இதில் சி. மனோஜ், த/பெ. சி. சிவராஜ் என்பவர் மாத வாடகையாக ரூ. 5100 க்கு கோரியுள்ளார். இது சென்ற மாத வாடகை மற்றும் சந்தை மதிப்பை காட்டிலும் குறைவாக வரப்பெற்றுள்ளது. இது பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், ஏல கோர யாரும் முன்வராத நிலையில் நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு நகராட்சியின் வருவாயினை ஈட்டும் வகையில் மேற்கண்ட திரு. சி. மனோஜ் என்பவரின் மாத வாடகை ரூ. 5100/– உறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : –**

மேற்கண்ட புதிய பேருந்து நிலைய கடை எண். 49 ஐ 65–வது முறையாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.12.2018 ம் தேதி கோரப்பட்டது. ஏலம் கோர யாரும் முன் வரவில்லை. ஒப்பந்தப்புள்ளி ஒன்று வரப்பெற்றது. இது சென்ற மாத வாடகையைக் காட்டிலும் குறைவாகவும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட கடை புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்காத பகுதியில் உட்புற கடையின் கடைசி பகுதி என்பதால் மக்கள் அதிக நடமாட்டம் இல்லாமலும், போக்குவரத்து இல்லாமல் உள்ள கடை என்பதால் ஏலம் கோரயாரும் முன்வரவில்லை. எனவே நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாத வகையில் மேற்கண்ட திரு. சி. மனோஜ் என்பவரின் உயர்ந்த பட்ச மாத வாடகை ரூ. 5100/– ஐ உறுதி செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ2)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 945, நாள் : 31.12.2018**

--------

9 திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 ன்படி நகராட்சிப் பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே மட்கச் செய்யும் வகையில் நகராட்சிப் பகுதிகளில் இட வசதியுள்ள பகுதிகளில் நுண்ணுயிர் உரமாக்கல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்தகைய நுண்ணுயிர் உரமாக்கல் தொட்டிகளில் சேகரிக்கப்படும் மட்கும் திடக்கழிவுகளை மட்கச்செய்யும் நுண்ணுயிரிகளை உருவாக்க தினசரி தயிர் மற்றும் வெல்லம் ஆகியன தேவைப்படுகின்றது.

இதனை தினசரி தேவைக்கேற்ப வாங்கிக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.30000/-த்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1) திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின் படி நுண்ணுயிர் உரமாக்கல் பணியின் அவசியம் கருதி நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**
**தீர்மானம் எண் : 946, நாள் : 31.12.2018**

---

10. சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம், வாரச்சந்தை, பழைய பேருந்து நிலைய வணிக வளாகக் கடைகளுக்கான மத்திய கலால் துறையின் சேவை வரிகள் 01.06.2007 முதல் 31.03.2013 வரை உண்டான காலத்திற்கான சேவை வரிக்கான வட்டி மற்றும் அபராதங்கள் செலுத்தக் கோருவது தொடர்பான அறிவிப்புகளின் மீது மேற்கண்ட அபராதத்திற்கான வரிவிலக்கு கோரி சென்னை சேவை மற்றும் கலால் துறையின் மத்திய தீர்ப்பாயம் மேல்முறையீடு வழக்கு எண்.ST/40296/2016 –க்கான வழக்கின் மீது சத்தியமங்கலம் நகராட்சி செலுத்த வேண்டிய அபராதத் தொகை ரூ. 1771730– ஐ தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பெறப்பட்டது. மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிட்ட திரு. எம். முத்துக்குமார், நகராட்சி சேவை வரி வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 265000 /– வழங்கிட கோரி 17.11.2018 ம் தேதி கடிதம் வழங்கியுள்ளார். அதன்படி நகராட்சிக்கு தீர்ப்பாணை பெற்று தந்த வழக்கு கட்டணம் ரூ. 265000/– வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2018–2019 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் இச்செலவினத்தை சேர்த்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 4000/2007/அ2)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

**தீர்மானம் எண் : 947 ,   நாள் : 31.12.2019**

---

11 சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிணிகள் அடிக்கடி பழுதாகி வருவதால் வரி வசூல் பணி மற்றும் ஆன்லைன் பணிகள் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்று அலுவலக பணியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே,அலுவலக பணியாளர்கள் புதிதாக மூன்று கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கி தர கோரிக்கை விடுத்துள்ளார்கள். ஆகவே,பணியின் அவசர அவசியம் கருதி புதிதாக கணிணி கொள்ளுமுதல் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம் .
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம். 2018-2019ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு மேற்கொள்ளலாம்.

(ந. க. எண். 100/2016/இ1)

**தீர்மானம் : அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) கே. எம். சுதா.
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ. பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.

//உண்மை நகல்/உத்திரவுப்படி//

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.